**பிப்ரவரி – 02**

# TNPSC துளிகள்

- சமீபத்திய தரவரிசைப்படி, மத்திய அரசின் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் (Deendayal Antyodaya Yojana-National Urban Livelihoods Mission - DAY-NULM) என்ற சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை அமல்படுத்துவதில் தமிழ்நாடு 18-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றது. 27 மாநிலங்களில் ஆந்திரப்பிரதேசமும் குஜராத்தும் முதல் இரு இடங்களை வகிக்கின்றன.
  - கடந்த வருடம் இதே பிரிவில் தமிழ்நாடு 4-வது நிலையில் வைக்கப்பட்டிருந்தது.
- இந்தியக் கடற்படையின் 75(I) என்ற திட்டத்தின் கீழ் 6 நீர்மூழ்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயேத் தயாரித்திட பாதுகாப்பு கொள்முதல் குழு (Defence Acquisition Council - DAC) ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- தேசிய மாணவர் படையின் இயக்குநர் ஜெனரலாக லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் சோப்ரா பதவியேற்றுள்ளார்.
- புதுதில்லியில் நொய்டாவில் தேசிய அருங்காட்சியக கல்வி நிலையத்திற்கான புதிய வளாகம் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகரால் திறந்து வைக்கப்பட்டது.
- இந்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்படும் சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு மாநாடு மற்றும் கண்காட்சியின் 3-வது பதிப்பு 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ம் தேதி துவக்கி வைக்கப்பட இருக்கின்றது.
- தேசிய பேரிடர் பதிலெதிர்ப்பு நிதியில் (National Disaster Response Fund - NDRF) இருந்து 6 மாநிலங்கள் மற்றும் ஒரு ஒன்றியப் பிரதேசத்திற்கு 7214.03 கோடிகள் அளவிற்கு மத்திய அரசின் கூடுதல் நிதியை அளித்திடுவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
  - உதவியளிக்கப்படும் மாநிலங்கள் இமாச்சலப்பிரதேசம், (வெள்ளம் மற்றும் நிலச்சரிவு) ஆந்திரப் பிரதேசம் (வறட்சி), குஜராத் (வறட்சி), கர்நாடகா (வறட்சி), மகாராஷ்டிரா (வறட்சி) மற்றும் ஒன்றியப் பிரதேசமான புதுச்சேரி (சூறாவளி).
- பிரதமர் மகாத்மா காந்தியின் நினைவு தினத்தன்று குஜராத்தின் நவசாரி மாவட்டத்தில் உள்ள தண்டியில் தேசிய உப்புச் சத்தியாக்கிரக நினைவிடத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
  - மேலும் அவர் அந்த நினைவிட வளாகத்தில், 1930 ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது காந்தியுடன் நடந்த 80 சத்தியாகிரகிகளின் சிலைகளை காந்தி சிலையோடு சேர்த்துத் திறந்து வைத்தார்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அல்போன்ஸ் கண்ணன்தனம் முன்னிலையில் டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற பாரத் பார்வ் நிகழ்ச்சியின் கொண்டாட்டம் முடிவிற்கு வந்தது.
  - இந்நிகழ்ச்சி தேசபக்த உணர்வை ஏற்படுத்தவும் நாட்டின் கலாச்சார பன்முகத் தன்மையை மேம்படுத்திடவும் எண்ணுகின்றது.
- அமெரிக்காவின் நியூயார்க்கில் சமீபத்தில் முடிவுற்ற மிகப்பெரிய பயணக் கண்காட்சியான நியூயார்க் டைம்ஸ் பயணக் கண்காட்சி 2019ல் சிறந்த

கண்காட்சிக்காக இந்தியா சிறப்பு விருதினைப் பெற்றது.

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்)

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்) / Pradhan Mantri Awas Yojana (Urban) என்ற திட்டத்தின் கீழ் நகர்ப்புற ஏழைகளின் நன்மைக்காக கூடுதலாக 4,78,670 விலை மலிவான வீடுகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- இந்த ஒப்புதல் மத்திய ஒப்புதலளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் 42-வது கூட்டத்தின் போது வழங்கப்பட்டது.
- தற்சமயம் இத்திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 72,65,763.

## தொழிற்துறைக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் பெயர் மாற்றம்

- அரசு தொழிற்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் (Department of Industrial Policy & Promotion - DIPP) பெயரை தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (Department for Promotion of Industry and Internal Trade) என்று மாற்றி அதன் செயல்பாடுகளை அதிகப்படுத்தியுள்ளதை அறிவிக்கையாக வெளியிட்டிருக்கின்றது.
- இந்த அறிவிக்கை அந்த புதிய பெயரிட்ட துறைக்கு நான்கு புதிய பொறுப்புகளின் பிரிவுகளையும் சேர்ந்திருக்கின்றது. அவையாவன
    - உள்நாட்டு வர்த்தக மேம்பாடு (சில்லறை வணிகத்தையும் சேர்த்து)
    - வர்த்தகர்கள் மற்றும் அவர்களின் தொழிலாளர்கள் ஆகியோரது நலன்
    - வியாபாரத்தை எளிமையாக்கிடச் செய்வது தொடர்பான விவகாரங்கள்
    - துவக்க நிறுவனங்கள் தொடர்பான விவகாரங்கள்

## ரயில்வேயின் எதிர்காலம் என்ற அறிக்கை

- மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் பியூஸ் கோயல் சர்வதேச ஆற்றல் முகமையின் (International Energy Agency-IEA) "ரயில்வேயின் எதிர்காலம்" என்ற அறிக்கையை வெளியிட்டார்.
- ரயில்வேயின் எதிர்காலம் என்ற அறிக்கையானது, ரயில்வேயின் ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களின் மதிப்பீடு மூலம் உலகம் முழுவதுமுள்ள ரயில்வேக்களின் தற்போதைய மற்றும் எதிர்கால முக்கியத்துவம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் அமைந்த முதலாவது அறிக்கையாகும்.
- இந்த அறிக்கை ரயில்வேயின் எதிர்காலம் மீதான தற்போதைய திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தாக்கத்தை சீராய்வு செய்கின்றது.

*சர்வதேச ஆற்றல் முகமை*

- இது தனது 30 உறுப்பினர் நாடுகள் மற்றும் 8 நட்பு நாடுகளுக்கு நம்பகமான, மலிவான மற்றும் சுத்தமான ஆற்றலை உறுதி செய்திட உழைத்திடும் ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது 1974 ஆம் ஆண்டில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டமைப்பில் உருவாக்கப்பட்டது.
- இதன் நோக்கம் ஆற்றல் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் உலகம் முழுவதுமான பங்களிப்பு ஆகிய நான்கு முக்கிய திட்டங்களால் வழி நடத்தப்படுகின்றது.

## முதலாவது சுவதேஷ் தர்சன் திட்டம்

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அல்போன்ஸ் கண்ணன்தனம் சிக்கிமின் கேங்டாங் நகரத்தில் "வடகிழக்கு சுற்றுப் பாதைக்கான மேம்பாடு" என்ற திட்டத்தைத் துவக்கி வைத்தார்.
- இது மத்திய சுற்றுலாத் துறையின் சுவதேஷ் தர்சன் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றது. மேலும் இத்திட்டத்தின் கீழ் சிக்கிமில் இது முதலாவது திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், அமைச்சகமானது சுற்றுலா கட்டமைப்பு வசதிகளான சுற்றுலாத் தகவல் மையம், தியான மையம், கரிமப் பொருள்களல்லாத சூழலைக் கொண்ட சுற்றுலா மையம், குடிசைகள், தொலைதூர இணைப்பு, வாகன நிறுத்தம், பொதுக் கழிப்பறை போன்ற வசதிகளை மேம்படுத்தியிருக்கின்றது.



# பொருளாதாரச் செய்திகள்

## 2017-18 காலத்திற்கான முதலாவது திருத்தப்பட்ட மதிப்பீடுகள்

- மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் மத்திய புள்ளியியல் அலுவலகம் (Central Statistics Office - CSO), 2017-18 நிதியாண்டிற்கான தேசிய வருமானம், நுகர்வோர் செலவு, சேமிப்பு மற்றும் முதலீட்டு உருவாக்கம் ஆகியவற்றுக்கான முதலாவது திருத்தப்பட்ட மதிப்பீட்டை வெளியிட்டிருக்கின்றது.
- இதனுடன் 2016-17 ஆம் நிதி ஆண்டிற்கான இரண்டாவது திருத்தப்பட்ட மதிப்பீடும் 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட 2015-16 ஆம் நிதியாண்டின் மூன்றாவது திருத்தப்பட்ட மதிப்பீடும் புதுப்பித்தல் கொள்கையின்படி வெளியிடப்பட்டன.

*மதிப்பீடுகளின் சிறப்பம்சங்கள்*

- பெயரளவிலான அல்லது நடப்பு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016-17 நிதியாண்டில் ஏற்பட்ட 11.5 சதவிகிதத்தை ஒப்பிடுகையில், 2017-18 நிதியாண்டில் 11.3 சதவிகித அளவிற்கு வளர்ச்சியை வெளிக்காட்டுகின்றது.
- நிலையான விலைகளிலான அல்லது உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016-17 நிதியாண்டில் 8.2 சதவிகித வளர்ச்சியையும் 2017-18 நிதியாண்டில் 7.2 சதவிகித வளர்ச்சியையும் காட்டுகின்றது.
- தற்போதைய விலைகளில் பெயரளவிலான நிகர தேசிய வருமானம் (Nominal Net National Income - NNI) முந்தைய 2016-17ம் நிதியாண்டில் ஏற்பட்ட 11.8 சதவிகிதத்தை ஒப்பிடும்போது 2017-18-ம் நிதியாண்டில் 11.3 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகின்றது.
- நடப்பு விலைகளில் உள்ள ஒட்டுமொத்த தேசிய செலவழிப்பு வருமானமானது (Gross National Disposable Income - GNDI) 2016-17 நிதியாண்டில் ஏற்பட்ட 11 சதவிகித வளர்ச்சியோடு ஒப்பிடப்படும்போது 2017-18ம் நிதியாண்டில் 11.2 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## துருவப் பகுதி சுழல் காற்று

- துருவப் பகுதி சுழல் காற்றின் காரணமாக பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தின்போது வடக்கு அமெரிக்க மாநிலங்களின் பெரும்பகுதி வரலாற்றுப் பதிவான குறைந்தபட்ச குளிர் வெப்பநிலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.
- துருவப் பகுதி சுழல்காற்று என்பது வடதுருவத்தைச் சுற்றியிருக்கும் உயர்வளிமண்டலத்தில் இருக்கும் ஒரு வலுவான காற்றின் பட்டைத் தொகுப்பாகும். இந்த வடதுருவம் வழக்கமாக கடுமையான குளிர்காற்றை ஆர்க்டிக் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளோடுத் தடுத்து விடுகின்றது.
- சுழல்காற்றுகள் சூறாவளியைப் போன்று எதிர்காற்றுத் திசையில் சுழலும் அடர்த்தியான காற்று மற்றும் அதிக நிறை கண்ட குளிர் காற்று ஆகியவற்றால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன.
- வழக்கமாக குளிர்காற்று தொலைதூர வடக்குப் பகுதியிலேயே தங்கி விடுகின்றது.

- இருந்தாலும் ஆர்க்டிக் பகுதியில் வழக்கத்திற்கு மாறாக இருக்கும் அதிகபட்ச வெப்பநிலை அக்காற்றை தெற்கு நோக்கி பயணிக்கச் செய்கின்றது.
- இந்த சுழற்காற்று வட அமெரிக்காவின் மீது ஒரு பகுதி இருக்கும்படியும் வடக்கு ஆசியா மற்றும் ஐரோப்பாவின் மீது மற்றொரு பகுதி இருக்கும்படியும் இரண்டு காற்று நிறைகளாக உடைந்திருக்கின்றது.
- இது ஒரே நேரத்தில் புதிய பகுதிகளில் நிறைய நாட்களுக்கு ஜீரோவிற்கு குறைவான வெப்பநிலைகளை ஏற்படுத்துவதில் திறன் பெற்றது.
- 2014 ஆம் ஆண்டின் துருவப் பகுதி சுழல்காற்று குளிர்காலங்கள் முழுவதும் நீடித்தமையால் மிகவும் குறிப்பிடத்தக்கது.

# மாநிலச் செய்திகள்

## நீண்ட தங்க நிற வால் உடைய குரங்க வகை (கோல்டன் லங்கூர்) பாதுகாப்பு இனவிருத்தித் திட்டம் - அசாம்



- அசாம் மாநில சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பிரமிளா ராணி பிரம்மா அம்மாநிலத்தில் கோல்டன் லங்கூர் பாதுகாப்பு இனவிருத்தித் திட்டத்தின் வெற்றியை அறிவித்தார்.
- இத்திட்டத்தின் நோக்கம் தற்சமயம் அருகிவரும் நிலையில் வகைப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வினத்தின் இனவிருத்தியை மேற்கொள்வதன் மூலம் அடர் வனங்களில் தாமாகவே தமது இனவிருத்தியை அவை மேற்கொள்ள இயலச் செய்வதாகும்.
- 1953 ஆம் ஆண்டில் இயற்கையாளர் E.P. ஜீ என்பவரால் கோல்டன் லங்கூர் (டிராகிபித்தீகஸ் ஜீ) கண்டறியப்பட்டது.
- இந்த லங்கூர் இனங்கள் மரங்களின் இலைகளை உண்ணும் குரங்கு வகைகளாகும்.

- இவை பிரதானமாக அசாமின் காடுகளிலும் முக்கியமாக மனாஸ் உயிர்க்கோள மையத்தின் பகுதிகளிலும் பூடானிலும் மட்டுமே காணப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - -